சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 27.11.2025
பி.வா.சா.1 – லோகேஸ்வரி W/o.கணபதி
O.S. No.289/2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

எனக்கும், என் கணவர் கணபதிக்கும் திருமணம் இலங்கையில் வைத்து நடத்தப்பட்டது என்றால் சரிதான். அப்போது தோட்டதொழிலாளியாக அவர் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை கணபதிபிள்ளை ரப்பர் எஸ்டேட்டில் conductor ஆக வேலை செய்தார். என் தாயார் மீனாம்பாள் வீட்டுக்குடித்தனம் செய்தார். என் திருமணத்தின் போது என் பெற்றோர்கள் எனக்கு 50 சவரன் தங்கநகைகளை சீதனமாக கொடுத்தார்கள். மல்லிகா ஜீவல்லர்ஸ் என்ற நகைகடையை இலங்கையில் கந்தையாபிள்ளை என்பவர் நடத்திவந்தார் என்றால் சரிதான் என்று சாட்சி சொல்லிவிட்டு மீண்டும் கூட்டாக நடத்தி வந்ததாக குறிப்பிடுகிறார். மேற்படி மல்லிகா ஜீவல்லர்ஸ் என்ற நகைகடையில் கந்தையா பிள்ளை என்பவருக்கும் என் கணவர் கணபதி அவர்களுக்கும் இடையில் எந்த பங்கும் இல்லை என்றால் சரியல்ல. கூட்டாக நடத்தி பிரித்து கொண்டார்கள். என் கணவர் தோட்டத்தில் காவலராக வேலை செய்தார் என்று நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது கணவர் தனியாக அவரது பெயரில் பத்மினி ஜீவல்லர்ஸ் என்ற பெயரில் கொழும்பில் நகைகடை நடத்திவந்தார். மேற்படி பத்மினி ஜீவல்லர்ஸ் என்பபது 1975ம் ஆண்டு கொழும்பில் எனது கணவரால் துவங்கப்பட்டது. பத்மினி ஜீவல்லர்ஸ் என்ற கடை தற்போது இல்லை, அதை நாங்கள் கொடுத்துவிட்டோம். அந்த காசை என்ன செய்தோம் என்று தற்போது நினைவில்லை. 1983ம் ஆண்டு குடும்பத்துடன் நானும் என் குழந்தைகளோடு மேலூருக்கு வந்துவிட்டோம் என் கணவர்மேலூருக்கு அவ்வப்போது வந்து சென்றுகொண்டிருந்தார். என் கணவருக்கு நாங்கள் மேலூருக்கு வந்த பிறகும் கூட கொழும்பில் தான்

வியாபாரம் நடந்து வந்தது என்றால் சரிதான். எனக்கு திருமணம் 1973ம் ஆண்டு நடந்தது. என்னுடைய சீதனமாக கொடுக்கப்பட்ட நகைகளை எனது கணவரிடம் தொழிலுக்காக கொடுத்துவிட்டேன். என் கணவர் நகைகடை தொழிலில் சம்பாதித்து சுமார் 200சவரன் தங்கநகைகளை என்னிடம் கொடுத்திருந்தார். மேலூருக்கு நான் வந்த பிறகு எந்தவிதமான வேலைக்கும் நான் செல்லவில்லை. வீட்டில் தான் இருக்கிறேன். இந்த வழக்கின் வாதியான என் மகனுக்கு 1983ம் ஆண்டு சுமார் 8 வயது இருக்கும். வாதி என்னுடைய மகன் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றும் அதற்கு மேல் படிக்கவில்லை என்றால் சரிதான். 1990ம் ஆண்டு வாக்கில் அவர் 10வது முடித்த கையோடு அவரை கொழும்பிற்கு அழைத்து என் கணவர் சென்றுகொண்டார் என்றால் சரிதான். என் கணவர் நகைகடை நடத்தி சம்பாதித்து கொடுத்த வருமானத்தை தவிர எனக்கு வேறு ஏதேனும் தனிப்பட்ட வருமானம் இருந்ததா என்றால் இல்லை. என் கணவர் 1990ம் ஆண்டில் வாதியாகிய என் மகனை கொழும்பிற்கு வரவழைத்து, அவர் கடையில் வைத்து தொழில் கத்து கொடுத்தார் என்றால் சரிதான். கந்தையா பிள்ளை என் கணவர் கணபதிக்கு பத்மினி ஜீவல்லர்ஸ் என்ற பெயரில் கடை வைத்துகொடுத்தார். என் மகனான வாதிக்கு கந்தானை ஜீவல்லர்ஸ் என்ற பெயரில் என் கணவர் மகனுக்கு வைத்து கொடுத்தார். என் கணவர் தனியாக நகைகடையும், நகைபட்டறையும் வைத்திருந்தார் என்றால் சரிதான். என் மூத்த மகள் பெயர் மகேஸ்வரி. 2வது வாதியான என் மகன் கனகேஸ்வரன். 3வதாக ஒரு மகள் கோகிலவாணி. என் மகன் இந்தியா வரும்போது என் கணவர் இலங்கையில் இருப்பார். என் கணவர் இந்தியா வரும்போது என் மகன் இலங்கையில் இருப்பார். என் கணவர் இந்தியாவிற்கு வரும்போது, சொத்துக்களை என் பெயரிலும், குழந்தைகள் பெயரிலும் வாங்கிவைப்பது வழக்கம் என்றால் சரியல்ல. என்னிடம் காசாக தான் என் கணவர் கொடுத்தார். நான் தான் சொத்தை வாங்கினேன். நான் நகையை

கொடுத்திருந்ததால் என்னிடம் அவர் காசை தான் கொடுத்தார். நான் பணம் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்து வந்ததற்கு உரிமம் வைத்திருந்தேனா என்றால் இல்லை. நான் பணம் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்து வந்ததற்கு கணக்குவழக்குகள் வைத்திருந்தேனா என்றால் இல்லை. நானும், வாதி என் மகன்குடும்பமும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் 2 மகள்களுக்கும் திருமணம் முடித்துவிட்டோம் என்றால் சரிதான். மூத்த மகளுக்கு திருமணம் முடித்து சுமார் 30 ஆண்டுகாலம் இருக்கும். இளையமகளுக்கு திருமணம் முடித்து 25 ஆண்டுகொலம் இருக்கும். ஒவ்வொரு மகள்களுக்கும் தலா 60 சவரன் தங்கநகைகள் திருமணத்தின் போது சீதனமாக கொடுத்தோம். நான் தற்போது குடியிருந்து வரும் வீடானது என் பெயரில் வாங்கப்பட்ட வீடு என்றால் சரிதான். 5 செண்டு காலியிடம் மேலூாரில் மெயின்ரோட்டில் என் மகன் கனகேஸ்வரன் பெயரில் என் கணவர் வாங்கிவைத்தார். மேலும் 11 செண்டு வீட்டடி மனை என் கணவர் வாதி பெயரில் வாங்கிவைத்தார். 53 செண்டு, நாக்குடிபள்ளத்தில் நஞ்சை நிலமாக என் மகன் பெயரில் வாங்கிவைத்தார். சிவகங்கை ரோட்டில் 18 செண்டு நிலத்தை விற்று அந்த பணத்தை கொண்டு கணபதி ஜீவல்லர்ஸ் என்ற பெயரில் என் மகனுக்கு நகைகடை வைத்து கொடுத்தார். 2018ம் ஆண்டு தான் கணபதி ஜீவல்லர்ஸ் என்ற பெயரில் நகைகடை வைத்து கொடுக்கப்பட்டது. 2018ம் ஆண்டு துவங்கப்பட்டதாக சொல்லப்படும் கணபதி ஜீவல்லர்ஸ் கடை தற்போது இயங்கவில்லை என்றால் சரிதான். 8 ஏக்கர் 30 செண்டு தென்னந்தோப்பானது,இந்த வழக்கின் 1வது இன சொத்து, நானும் எனது கணவரும் சேர்ந்து ஆள்வைத்து தென்னந்தோப்பை பராமரித்து வந்தோம். மேற்படி தென்னந்தோப்பை என் கணவர் காலத்திற்குபிறகு வாதியாகிய என் மகன் தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அவர் எனக்கு பணம் எதுவும் கொடுப்பதில்லை. நானும், என் மகனும் ஒரே வீட்டில் வாழ்ந்து

வருகறோம் என்றும் என்னை என் மகன் தான் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் 2 வீடு வாடகைக்கு விட்டிருக்கிறேன் வாடகை பணத்தை வைத்து தான் நான் என்னை பராமரித்து வருகிறேன். என் மகன் என்னை பராமரிக்கவில்லை என்பதற்கு நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. என் கணவர் கணபதி ஆங்கிலத்திலும், தமிழிலும் கையெழுத்து இடுவது வழக்கம் என்றால் சரிதான். நானும் என் கணவரும், என் மகன் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளோம் என்றால் எந்த உயிலும் நான் எழுதிவைக்கவில்லை. சாட்சியிடம் 27.02.2002 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் காட்டப்பட்டு, சாட்சி அதை பார்வையிட்டு அவ்வாறு நான் உயில் எழுதவில்லை என்று குறிப்பிடுகிறார். நான் வழக்கிற்காக மறுக்கிறேன் என்றும் நானும் என் கணவரும் மேற்படி 2002ம் ஆண்டு உயிலை எழுதி பதிவு செய்து வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் பதிவு செய்ய செல்லவே இல்லை என்று சாட்சி குறிப்பிடுகிறார். மேற்படி 2002ம் ஆண்டு உயிலை என் கணவரும் நானும் சேர்ந்து எழுதி எல்லோருக்கும் கொடுக்கும்படி குறிப்பிட்டிருக்கிறார் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பானது 2 முறை எனது வீட்டிற்கு அனுப்பப்பட்டது ஆனால் எனக்கு தெரியவில்லை, 3 வது முறை தான் என் மருமகள் என்னிடம் காட்டினார். அப்போது தான் வழக்கு போட்ட விபரமே எனக்கு தெரியவந்தது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஒரே முகவரியில் நானும், வாதியும் இருப்பதால் அது திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். என் மருமகள் என்னிடம் தகவல் சொன்ன பிறகு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நீதிமன்றத்திற்கு வந்துவிட்டேன். என் மருமகள் என்னிடம் அறிவிப்ை பெற்று கொள்ளவேண்டாம் என்று திருப்பி அனுப்பும்படி வாதி கூறியதாக என்னிடம் தெரிவித்தார். ஆனால் நான் அறிவிப்பை பெற்று கொண்டேன்.

திருமணத்திற்கு பின்னர் என் மகள்கள் இருவரும் எங்கள் வீட்டிற்க அவ்வப்போது வருவது வழக்கம் என்றும் நாங்களும் அவ்வப்போது அவர்கள் வீட்டிற்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்களை எல்லாம் என் மகள்களிடம் கலந்துகொண்டேனா என்றால் சொல்லியிருக்கிறேன். 2002ம் ஆண்டு உயிலில்கண்ட சொத்துக்களை பொறுத்து நான் எந்த வில்லங்கமும் தற்போது வரை செய்யவில்லையா என்றால் செய்யவில்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எல்லாம் எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்கள் எந்தெந்த தேதியில் எப்போது வாங்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்களை பொறுத்து நான் எந்த வில்லங்கமும் தற்போது வரை செய்யவில்லை என்றால் சரிதான்.2002ம் ஆண்டு எழுதப்பட்ட உயிலில் என் கணவர் வழக்கு சொத்ததை என் ஆயுட்காலம் வரை அனுபவித்து கொள்ளும்படியும், என் ஆயுளுக்கு பிறகு வாதியான என் மகனுக்கு சர்வசுதந்திர பாத்தியம் என்று எழுதியிருக்கிற விபரம் தெரியுமா என்றால் உயில் எழுதவில்லை அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களது வீட்டில் வைத்து வழக்கு வருவதற்கு முன்பாக என் மகனும், நானும், கமலேந்திரன் என்ற ஒரு உறவினர் முன்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. எல்லாவிபரங்களும் தெரிந்து கொண்டு, நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் கனகேஸ்வரனுக்கு நானும் என் கணவரும் முன்னின்று, செலவு செய்து, திருமணம் முடித்து வைத்தோம் என்றால் சரிதான். என் 2 மகள்களுக்கும் நிறைய தங்கநகைகளை சீதனமாக கொடுத்து, பிரமாண்டமாக திருமண ஏற்பாடு செய்து நல்ல செலவு செய்து திருமணம் முடித்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அது பொய்யாகும். என் 2 மருமகன்களும், என் மகள்களை திருமணம்முடித்து கொடுத்த போது, நல்லநிலையில், நல்ல வருமானத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். என் 2 மகள்களும், தற்போது வரை என்னுடன் அவ்வப்போது வீட்டிற்கு வந்து நல்ல

உறவுடன் தான் இருந்து வருகிறார்கள். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருதயகோளாறு ஏற்பட்ட போது என் கணவர் உடன் இருந்து என்னை கவனித்து கொண்டார். என் மகனும் உடன் இருந்தார். என் 2 மகள்களையும், நல்ல செலவு செய்து, திருமணம் முடித்து கொடுத்துவிட்டோம் என்றால் மூத்த மகள் மகேஸ்வரிக்கு மாப்பிள்ளை வீட்டில் திருமண செலவுகளை ஏற்று கொண்டார்கள். நாங்கள் 60 சவரன் நகைபோட்டு திருமணம் முடித்து கொடுத்தோம். 2வது மகளுக்கு திருமணம் நாங்களே செலவு செய்து 60 சவரன் நகைபோட்டு திருமணம் முடித்து கொடுத்தோம். எங்களுடைய மகள்களுக்கு நல்ல முறையில் திருமண செலவுகளை செய்து அவர்களுக்கு செய்யவேண்டிய அனைத்து சவரட்சணைகளையும் செய்து கொடுத்துவிட்டார் என்றும், அதை நான் தற்போது வழக்கிற்காக மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமாக வருமானம் எதுவும் இல்லை என்றும், என் கணவர் தான் எனக்கு என் பெயரில் சொத்து வாங்கிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.27 20:42:18 +0530

Sub Judge

Melur